# கருமத்தம்பட்டி (தேர்வுநிலை) பேரூராட்சி
# கோயம்புத்தூர் மண்டலம்

**ந.க.எண். 274 / 2009** **நாள்:- 10.05.2010**

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

கோயம்புத்தூர் மாவட்டம், கருமத்தம்பட்டி பேரூராட்சியில் கீழ்கண்ட வேலையை செய்து முடிப்பதற்கு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுகின்றன.

ஒப்பந்தப்புள்ளிகள் கருமத்தம்பட்டி பேரூராட்சியின் சார்பாக அதன் செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் 26.05.2010 ந் தேதி புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளிகளை மூடி முத்திரையிடப்பட்ட உறையில் வைத்து உறையின் மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தபுள்ளி என்றும், ஒப்பந்தப்புள்ளி தேதி மற்றும் நேர விபரங்களுடன் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் 26.05.2010 மாலை 3.30 மணிக்கு பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் திறந்து பரிசீலனை செய்யப்படும். மேற்படி வேலைக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் விலை + விற்பனை வரி மற்றும் ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகை ஆகியவை கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளதை பேரூராட்சி அலுவலகத்தில் 25.05.2010 மாலை 5.00 மணி வரை செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்கண்ட தொகை திரும்ப வழங்கப்படமாட்டாது. ஒப்பந்த ஆவணங்கள், ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் ஒவ்வொரு வேலைக்கும் செலுத்த வேண்டிய வைப்புத் தொகை ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டால் செலுத்தப்பட வேண்டிய காப்புத் தொகை, சொத்துமதிப்புத் தொகை மற்றும் இதர விபரங்கள் இவ்வலுவலகத்தில் வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் நேரில் கேட்டுக் தெரிந்து கொள்ளலாம்.

மதிப்பீட்டுத் தொகை ரூ.25.00 இலட்சம் மற்றும் அதற்கு மேல் உள்ள பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி அளிக்க விருப்பமுள்ளவர்கள் கீழ்க்கண்ட இணைய தளங்களில் ஒப்பந்தப்புள்ளி நமுனா நகல் எடுத்தும் உரிய கட்டணத்தை பேரூராட்சியில் செலுத்தி ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளலாம்.

* இணையதள முகவரி : **1.www.tenders.tn.gov.in**

**2. www.tntownpanchayats.org &**

**3. www. tn.gov.in/dtp**

### பொதுநிதித் திட்டம் 2010–2011

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (இலட்சத்தில்) | செலுத்த வேண்டிய வைப்புத் தொகை மதிப்பீட்டிற்கு 2% | ஒப்பந்தப் படிவக் கட்டணம் மற்றும் விற்பனை வரி | வேலை செய்து முடிக்க வேண்டிய காலம் வேலை உத்திரவு வழங்கிய தேதியிலிருந்து |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | சோமனூர் க.ச.எண்.96/சி2ல் உள்ள பேரூராட்சிக்கு சொந்தமான காலி இடத்தில் தரைதளத்தில் (Ground Floor ) 14 வணிக வளாக கடைகள் கட்டுதல் மற்றும் தரைதளத்திற்கு கீழ் ( Vechile Parking Place at Basement ) வாகனங்கள் நிறுத்துமிடம் அமைத்தல் | 40.00 | 80,000 | 9000 + 360 | 180 நாட்கள் |

### நிபந்தனைகள்

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.25.00 இலட்சம் மற்றும் அதற்கு மேல் உள்ள பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி அளிக்க விருப்பமுள்ளவர்கள் கீழ்க்கண்ட இணைய தளங்களில் ஒப்பந்தப்புள்ளி நமுனா நகல் எடுத்தும் உரிய கட்டணத்தை பேரூராட்சியில் செலுத்தி ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளலாம்.

* இணையதள முகவரி : **1.www.tenders.tn.gov.in**

**2. www.tntownpanchayats.org &**

**3. www. tn.gov.in/dtp**

2. ஒப்பந்தப்புள்ளிக்கான வைப்புத் தொகையினை செலுத்தி அசல் ரசீதினை இணைத்து மூடி முத்திரையிடப்பட்ட உரையில் வரிசை எண், பணியின் விவரம் தனித்தனியாக எழுதி சமர்ப்பித்தல் வேண்டும். காசோலைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

3. ஒப்பந்தப்புள்ளிகளை தள்ளிவைக்கவோ அல்லது நிராகரிக்கவோ செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு. வேலைகள் கிடைக்கப் பெறாத ஒப்பந்ததாரர்களுக்கு கருமத்தம்பட்டி பேரூராட்சி மன்ற ஒப்புதலுக்குப் பிறகு வைப்புத் தொகை திருப்பி வழங்கப்படும்.

4. பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சிமன்றத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்டதாகும்.

5. ஒப்பந்தப்புள்ளிகள் சதவிகிதம் விதிகளுக்கு குறைவாக அளிக்கப்பட்டிருந்தால் உரிய கூடுதல் வைப்புத் தொகையை செலுத்திய பின்னரே பணிக்கான உத்திரவு வழங்கப்படும்.

6. வேலைக்கான உத்தரவு கிடைக்கப்பெற்றதும் ரூ. 50/—க்கான முத்திரை தாளில் ஒப்பந்ததாரர் ஒப்பந்தபத்திரம் செயல் அலுவலருக்கு எழுதி தாக்கல் செய்யப்படவேண்டும்.

7. வேலைக்கான உத்தரவு கிடைக்கப்பெற்றவுடன் உத்தரவில் குறிப்பிட்டுள்ள நாட்களுக்குள் பணி முடித்து அறிக்கை அனுப்புதல் வேண்டும்.

8. வேலை துவங்கும் பொழுதும், வேலை நடைபெற்றிருக்கும் பொழுதும், பணி முடிவடைந்த நிலையிலும் புகைப்படம் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

9. வேலை நடக்கும் இடத்தில் வேலைகள் குறித்த விபரம் அடங்கிய பெயர்ப்பலகை அமைக்கப்பட வேண்டும்.

10. பணிகள் உரிய காலத்தில் செய்து முடிக்கப்பட வேண்டும். நிபந்தனைகளும் செயல் அலுவலர் மற்றும் உயர் அலுவலர்களால் அவ்வப்போது விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு பணிகள் செய்யப்பட வேண்டும்.

11.கட்டுமானப் பணிக்கு சிமெண்ட் மற்றும் இரும்பு கம்பிகள் துறை மூலம் வழங்கப்படமாட்டது.

12. வேலையை அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தக்காரர் வேறு யாருக்கும் மறு ஒப்பந்தம் செய்யக்கூடாது. அவ்வாறு செய்தது தெரிய வந்தால் அவ்வேலைக்கான உத்திரவு ரத்து செய்வதுடன் அதனால் ஏற்படும் இழப்புக்களை ஒப்பந்ததாரரிடமிருந்து வசூலிக்கப்படும்.

13. நடைபெறும் பணியின் மதிப்பில் வருமான வரி 2 % , வருமான வரியில் மேல்வரி 12 %, வருமான வரியில் கல்வி வரி 10%, விற்பனைவரி 2 %, விற்பனைவரி மேல்வரி 5 % கூடுதல் வைப்புத் தொகை 5% மற்றும் 0.3 சதவிகிதம் கட்டுமானத் தொழிலாளர்கள் நல நிதியும் பிடித்தம் செய்து உரிய தலைப்பில் செலுத்தப்படும்.

14. கூடுதல் விபரம் அறிய விரும்புவோர் அலுவலக வேலை நாட்களில் அலுவலக வேலை நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

15. வேலைகளுக்கு பயன்படுத்தப்படும் கட்டுமானப் பொருட்கள் அனைத்திற்கும் இனம் வாரியாக தரச்சான்று பெற்று இணைக்கப்பட வேண்டும்.

**(ஒப்பம்) தலைவர்**
**கருமத்தம்பட்டி (தேர்வுநிலை)பேரூராட்சி**
**சோமனூர் – 641 668.**

**( ஒப்பம் )** செயல் அலுவலர்
**கருமத்தம்பட்டி(தேர்வுநிலை)பேரூராட்சி**
**சோமனூர் – 641 668.**

// உண்மை நகல் //

**செயல் அலுவலர்,**
**கருமத்தம்பட்டி(தேர்வுநிலை)பேரூராட்சி**
**சோமனூர் – 641 668.**